# புதுச்சேரி மண்டல மற்றும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி

புதுச்சேரி அரசின் பள்ளிக்கல்வி இயக்ககம் சார்பில், மண்டல மற்றும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி வரும் 28.10.2017 (சனிக்கிழமை) மற்றும் 03.11.2017 (வெள்ளிக்கிழமை) ஆகிய நாட்களில் முறையே துவங்கவுள்ளது.

இது குறித்து அறிவியல் கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளரும், வில்லியனூர் கண்ணகி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் துணை முதல்வருமான இளங்கோ கொல்பேர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

**அறிவியல் கண்காட்சி**

புதுச்சேரி அரசின் பள்ளிக்கல்வி இயக்ககம் சார்பில், மண்டல மற்றும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி இலாசுப்பேட்டை, நாவலர் நெடுஞ்செழியன் அரசு மேல்நிலைப்பள்ளியில் வரும் 28.10.2017 (சனிக்கிழமை) முதல் 06.11.2017 வரை நடைபெற இருக்கிறது.

இக்கண்காட்சியில் **"நிலைத்த முன்னேற்றத்திற்கான புதிய கண்டுபிடிப்புகள்"** என்ற தலைப்பில் தொடக்க நிலை , நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை ஆகிய பிரிவுகளில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவிகளின் அறிவியல் படைப்புகள் இடம் பெறுகின்றன.

மேலும் கண்காட்சியில் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, வளங்களின் மேலாண்மை மற்றும் உணவு பாதுகாப்பு, கழிவு மேலாண்மை மற்றும் நீர்வள பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு, மின்னணு மற்றும் தொழில் நுட்ப தீர்வுகள்,கணித மாதிரிகள் சம்மந்தமான படைப்புகள் இடம்பெறுகின்றன.

3 நாட்கள் மண்டல மற்றும் 3 நாட்கள் மாநில அளவிலான நடைபெறும் இந்த கண்காட்சியை அனைத்து பள்ளி மாணவர்களும் பார்வையிட வசதியாக கீழ்காணும் கால அட்டவணை ஒதுக்கப்பட்டுள்ளது.

## School Visit - Schedule

**மண்டல அளவிலான அறிவியல்கண்காட்சி:**

| Date & Session | Time | Area of the Schools ( Govt. and Private) |
|---|---|---|
| 28-10-2017 F.N. | 11.00 AM to 01.00 PM | Inaugural function at 10.00 AM.<br>All Schools in Pondicherry Municipality |
| 28-10-2017 A.N. | 01.30 PM to 04.00 PM | All Schools in Pondicherry Municipality and Nettappakkam commune |
| 30-10-2017 F.N. | 10.00 AM to 01.00 PM | All Schools in Bahour &Villianur communes. |
| 30-10-2017 A.N. | 01.30 PM to 04.00 PM | All Schools in Oulgaret Municipality & Mannadipet communes |
| 31-10-2017 F.N. | 10.00 AM to 01.00 PM | All Schools in Ariankuppam commune& Municipality |
| Public Visit Time: 04.00 PM to 05.00 PM on 28th Oct. 2017 and 30thOct. 2017. | | |

**மாநில அளவிலான அறிவியல்கண்காட்சி:**

| Date & Session | Time | Area of the Schools ( Govt. and Private) |
|---|---|---|
| 03-11-2017 F.N. | 11.00 AM to 01.00 PM | Inaugural function at 10.00 AM.<br>All Schools in Pondicherry Municipality |
| 03-11-2017 A.N. | 01.30 PM to 04.00 PM | All Schools in Pondicherry Municipality and Nettappakkam commune |
| 04-11-2017 F.N. | 10.00 AM to 01.00 PM | All Schools in Bahour &Villianur communes. |
| 04-11-2017 A.N. | 01.30 PM to 04.00 PM | All Schools in Oulgaret Municipality & Mannadipet communes |
| 06-11-2017 F.N. | 10.00 AM to 01.00 PM | All Schools in Ariankuppam commune& Municipality |
| Public Visit Time: 04.00 PM to 05.00 PM on 4thNov. 2017 and 6th Nov. 2017. | | |

மேலும் பொதுமக்கள் தினமும் மாலை 4 மணி முதல் 5 மணி வரை பார்வையிடலாம் என இச்செய்திக்குறிப்பின் மூலம் அழைப்புவிடப்படுகிறது.

இச்செய்தியினை தங்கள் மேலான நாளிதழில் வெளியிட்டு உதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இவண்,
இளங்கோ கொல்பேர்
ஒருங்கிணைப்பாளர்.